Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 85/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பால்ராஜ் |
| Father/Husband Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.12.2025.

<u>(எதிரிகள் ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் வருடன் தேவிப்பட்டினம் கடலோர பிரிவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 08.05.2015ம் தேதி மாலை 04.00 மணிக்கு இராமேஸ்வரம் கடலோர பாதுகாப்பு பிரிவு ஆய்வாளர் திரு.ரமேஷ்குமார் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் நான், சார்பு ஆய்வாளர் அய்யனார், பாலகிருஷ்ணன், காவலர்கள் முத்துப்பாண்டி, கணேசன், ராஜு, இளையராஜா, திருமுருகன், செந்தில்குமார் ஆகியோர்களுடன் தொண்டி காவல்

நிலையத்திற்குட்பட்ட தொண்டி – மதுரை செல்லும் ரோட்டில் தொண்டியில் உள்ள SR பெட்ரோல் பல்க் அருகில் கண்காணித்து வந்தபோது இரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்பேரில் ஒரு ஆட்டோவும், ஒரு இருசக்கர வாகனமும் ஒன்றன்பின்ஒன்றாக வந்தது. அந்த ஆட்டோவை நிறுத்தி சோதனை செய்தபோது ஆட்டோவில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட 60 வயது மதிக்கத்தக்க சித்திஆயிஷா க/பெ.சீனிநைனாமுகம்மது, கிழக்குதெரு, திருப்பாலைக்குடி என்பவர் ஒரு பையில் 100 எண்ணிக்கையிலான ஜெலட்டின் குச்சிகளை வைத்திருந்தார். அதுபற்றி விசாரித்தபோது அவர் அந்த ஜெலட்டின் குச்சிகளை வைத்திருப்பதற்கு எவ்வித அரசு அனுமதி பெறவில்லை என கூறினார். பின்னர் TN 65 K 9778 என்ற எண்கொண்ட ஆட்டோவை ஓட்டி வந்த நபரை விசாரித்தபோது தன்னுடைய பெயர் சுல்பிகர்அலி த/பெ.அய்யர், வடக்குத்தெரு, தொண்டி எனக்கூறினார். காவல் ஆய்வாளர் அரசு அனுமதியின்றி வைத்திருந்த 100 ஜெலட்டின் குச்சிகளை சித்தி ஆயிஷாவிடம் இருந்தும், ஆட்டோவை சுல்பிகர் அலியிடமிருந்தும் அத்தாட்சி தயார் செய்து காவலர்கள் முத்துப்பாண்டி, கணேசன் ஆகியோர்கள் முன்னிலையில் மாலை 04.30 மணிக்கு கைப்பற்றினார். பின்னர் அத்தாட்சியில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றார். பின்னர் ஆட்டோவிற்கு பின்னால் கருப்பு, சிவப்பு நிறம் கொண்ட பதிவெண் இல்லாத பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த நபரை நிறுத்தி விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் துரைபாண்டி என்ற கார்த்திக் த/பெ.வடுகையன், புதுகுடி, தொண்டி என்றும் தெரிவித்தார். அவர் வந்த இருசக்கர வாகனத்தை காவல் ஆய்வாளர் சோதனை செய்தபோது இருசக்கரவாகனத்தின் பவுச்சில் 130 எண்ணிக்கையிலான டெட்டனேட்டர்கள் மற்றும் 20 அடி நீளமுள்ள 2 சேப்டி பியூஸ் வயர்களை அத்தாட்சி தயார் செய்து காவலர்களான முத்துப்பாண்டி, கணேசன் முன்னிலையில் மாலை 05.15 மணிக்கு கைப்பற்றினர். மேற்படி சம்பவத்தின்போது நான், காவல் ஆய்வாளர் மேற்படி நபர்களிடம் விசாரணை செய்து அவர்களிடம் இருந்த ஜெலட்டின், டெட்டனேட்டர்கள், ஆட்டோ, இருசக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றி தொண்டி காவல் நிலைத்திற்கு கொண்டு வருவதற்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார் மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க தொண்டி காவல் நிலையத்தில் இரவு 07.00 மணியளவில் தனிஅறிக்கையுடன் எதிரிகளையும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஒப்படைத்தார். இது சம்மந்தமாக தொண்டி காவல் நிலைய காவல்

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

கடலோர காவல் படைக்கு ஆய்வாளர் அலுவலகம் இராமேஸ்வரத்தில் உள்ளது என்றால் சரிதான். அங்குதான் ஆய்வாளர் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அலுவல் சம்மந்தமாக நான் ஆய்வாளரை சந்திக்க வேண்டும் என்றால் இராமேஸ்வரம் சென்றுதான் சந்திக்க வேண்டும் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த காவல்நிலையம் தேவிப்பட்டினம் கடலோரத்தில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் பணி தேவிப்பட்டினத்திலிருந்து எஸ்பி பட்டினம் வரை உள்ள கடல் பகுதியில் சட்ட விரோதமான செயல்களை கண்காணிப்பது என்றால் சரிதான். கடற்கரையிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்கைவரைதான் கடலுக்குள் சென்று சோதனையிடுவதற்கு எங்களுக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். கடற்கரையிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்கைவரைதான் நிலப்பகுதியிலும் சோதனையிடுவதற்கு அதிகாரம் உண்டு என்றால் சரியல்ல. கடலோர பாதுகாப்பு பிரிவிற்கு கடற்கரையிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரைதான் சோதனையிடுவதற்கு அதிகாரம் உண்டு என்றும், அதை தாண்டி அதிகாரம் இல்லை என்றும், நான் தற்போது அதிகாரம் உள்ளதாக வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் கொடுத்த தனிஅறிக்கையிலோ, நான் தொண்டி காவல் ஆய்வாளர் விசாரணை செய்தபோது கொடுத்த வாக்குமூலத்திலோ எந்த இடத்தில் சோதனை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு பாக்கெட் டைரி வைத்து பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். அன்றாட பணிகள் சம்மந்தமாக அந்த பாக்கெட்டைரியில் குறிப்பிட்டு வரவேண்டும் என்றால் சரிதான். 08.05.2015 ம் தேதி என்ன பணி செய்தோம் என்பதை பாக்கெட் டைரியை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான் பராமரித்து வந்த பாக்கெட்டைரியை புலன்விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் ஒப்படைக்காததற்கு காரணம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இவ்வழக்கிற்கு விரோதமாக உள்ளதால்தான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புலன் விசாரணை அதிகாரியான தொண்டி காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலம் அளிக்கும்போது என்னுடன் பணி செய்ததாக சொல்லும் காவலர்கள் ராஜு, இளையராஜா, திருமுருகன், செந்தில்குமார், முத்துப்பாண்டி, கணேசன் ஆகியோர்களும் இருந்ததார்கள் என சொல்லவில்லை

என்றால் சரிதான். அதேபோல் காவல் ஆய்வாளர் கொடுத்த தனிஅறிக்கையிலும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, காவலர்களின் எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் வழக்கிற்காக காவலர்கள் எண்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சோதனை செய்தஇடத்திலிருந்து தொண்டி காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் 5 – 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். 3 மணி நேரம் காலதாமதமாக தொண்டி காவல் நிலையத்தில் ஒப்படைத்ததற்கு காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் காலதாமதம் ஏற்படவில்லை. கைப்பற்றப்பட்ட ஜெலட்டின் மற்றும் டெட்டனேட்டர்கள் அரசு அனுமதி பெற்று இயங்கும் வெடிமருந்து கடைகளில் கிடைக்கக்கூடிய பொருட்கள் என்றால் சரிதான். 3ம் எதிரி உள்ளிட்ட பொதுமக்கள் தொண்டியில் கடலோர காவல்படைக்கு கட்டிடம் கட்டக்கூடாது என போராட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். 3ம் எதிரியும் அந்த போராட்டத்தில் கலந்து கொண்டார் என்று தொண்டி காவல் நிலையத்தில் அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. 3ம்எதிரி கடலோர காவல் படைக்கு கட்டினம் கட்டக்கூடாது என ஆட்சேபித்து போராட்டம் நடத்தியதாலும், மற்ற எதிரிகள் மீது முன் வழக்குகள் இருந்ததாலும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை கடைகளில் வாங்கி பின்னிட்டு ஜோடிக்கப்பட்டு பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், இடத்தில் வைத்து எதிரிகளிடம் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் பணி செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.